සියලු ම හිමිකම් ඇවිරිණි.
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

දෙවන වාර ඇගැයීම
இரண்டாம் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade } 09 | විෂය / பாடம் / Subject } இஸ்லாம் | පත්‍රය / வினாத்தாள் / Paper } I,II | පැය / மணித்தியாலம் / Hours } 2 |

## பகுதி - I

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**(01) மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. ‘‘ஜாமிஉல் குர்ஆன்’’ என அழைக்கப்படுபவர்,
   1. உமர் (ரழி) அவர்கள்  2. அபூபக்கர் (ரழி) அவர்கள்
   3. உஸ்மான் (ரழி) அவர்கள்  4. அலி (ரழி) அவர்கள்

2. பாவமன்னிப்புத் தேடுவதற்கு மிகப் பொருத்தமான நேரமாகக் காணப்படுவது,
   1. தஹஜ்ஜுத் நேரம்  2. வெள்ளிக்கிழமை தினம்
   3. அரபாவுடைய நாள்  4. ரமழான் மாதம்

3. ஹஜ் கடமையாக்கப்பட்ட ஹிஜ்ரி ஆண்டு,
   1. ஹிஜ்ரி 8  2. ஹிஜ்ரி 10  3. ஹிஜ்ரி 9  4. ஹிஜ்ரி 7

4. கலீபா அபூபக்கர் (ரழி) அவர்களின் காலத்தில் இடம்பெற்ற யுத்தம்,
   1. நஹர்வான்  2. ஆர்மீனியா  3. சிப்பீன்  4. யமாமா

5. அல்குர்ஆனின் 93 ஆவது அத்தியாயம்,
   1. ஸூறா வாகியா  2. ஸூறா ழுஹா  3. ஸூறா மாயிதா  4.ஸூறா புர்க்கான்

6. நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜுக்குச் செல்லும் போது தன் சார்பாக மதீனாவுக்குப் பொறுப்பாளராக நியமித்த ஸஹாபி,
   1. அபூபக்கர் (ரழி) அவர்கள்  2. உமர் (ரழி) அவர்கள்
   3. அபூ துஜானா (ரழி) அவர்கள்  4. முஸ்அப் (ரழி) அவர்கள்

7. ஸஹீஹ் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் ஆகிய நூல்களில் இடம்பெறும் ஹதீஸ்களின் எண்ணிக்கை முறையே,
   1. 7275, 4800  2. 4800, 4000  3. 7275, 4000  4. 4000, 7275

8. ‘‘மஹப்பதுர் ரஸூல்’’ என்ற சொல்,
   1. நபி (ஸல்) அவர்களின் வழிமுறையைப் பின்பற்றுவதைக் குறிக்கும்.
   2. நபி (ஸல்) அவர்களின் மீது அன்பு வைத்தலைக் குறிக்கும்.
   3. நபி (ஸல்) அவர்களின் தோழர்களை நேசிப்பதைக் குறிக்கும்.
   4. நபி (ஸல்) அவர்களைப் புகழ்வதைக் குறிக்கும்.



kalvi.lk

9. மக்கா காபிர்களால் கழுமரத்தில் ஏற்றி கடுமையாக சித்திரவதை செய்யப்பட்ட ஸஹாபி,

1. ஸைத் பின் ஸாபித் (ரழி) அவர்கள்
2. ஸைத் பின் ஹாரிதா (ரழி) அவர்கள்
3. ஸைத் பின் தாஸினா (ரழி) அவர்கள்
4. ஸைத் பின் ஸஃத் (ரழி) அவர்கள்

10. ஹதீஸ் துறை உச்ச வளர்ச்சி அடைந்தது,

1. நபி (ஸல்) அவர்களின் காலத்தில்
2. ஸஹாபாக்களின் காலத்தில்
3. தாபிஈன்களின் காலத்தில்
4. தபஉத் தாபிஈன்களின் காலத்தில்

11. நபி (ஸல்) அவர்கள் இறுதி ஹஜ்ஜின் போது நிகழ்த்திய உரையை மக்கள் மத்தியில் சத்தமிட்டுக் கூறியவர்,

1. பிலால் (ரழி) அவர்கள்
2. அபூபக்கர் (ரழி) அவர்கள்
3. ரபீஅத் இப்னு உமையா (ரழி) அவர்கள்
4. அபூ ஸுஃப்யான் இப்னு உமையா (ரழி) அவர்கள்

12. ''ஸஹீஹைன்'' என அழைக்கப்படும் ஹதீஸ் கிரந்தங்கள்,

1. ஸஹீஹுல் புகாரியும், ஸுனன் இப்னு மாஜாவும்.
2. ஸஹீஹுல் முஸ்லிமும், ஸுனன் நஸாஈயும்
3. ஸஹீஹுல் புகாரியும், ஸஹீஹுல் முஸ்லிமும்
4. ஜாமிஉத் திர்மிதியும், ஸுனன் அபூதாவுதும்.

13. அல்குர்ஆனை நூலுருப்படுத்தும் குழுவுக்கு தலைமை தாங்கிய ஸஹாபி,

1. ஸைத் பின் ஹாரிதா (ரழி) அவர்கள்
2. அபூபக்கர் (ரழி) அவர்கள்
3. ஸைத் பின் ஸாபித் (ரழி) அவர்கள்
4. உமர் (ரழி) அவர்கள்

14. 'மஸ்ஜித்' என்ற பதத்தின் கருத்து,

1. தொழுமிடம்
2. குத்பா நடைபெறும் இடம்
3. ஸுஜூத் செய்யுமிடம்
4. ஹதீஸ் போதனைகள் செய்யுமிடம்

15. ஹஜ் கிரியை ஆரம்பமாகும் நாள்,

1. துல்ஹஜ் பிறை 1 இல்
2. துல்ஹஜ் பிறை 10 இல்
3. துல்ஹஜ் பிறை 8 இல்
4. துல்ஹஜ் பிறை 7 இல்

16. ''தர்தீபுத் திலாவத்'' என்ற சொல் குறிப்பது,

1. அல்குர்ஆன் இறங்கிய ஒழுங்கை
2. அல்குர்ஆன் ஓதப்படும் ஒழுங்கை
3. அல்குர்ஆன் எழுதப்பட்ட ஒழுங்கை
4. அல்குர்ஆன் தொகுக்கப்பட்ட ஒழுங்கை



kalvi.lk

17. தொகுதி A ஐ B யுடன் ஒழுங்குபடுத்தினால் வரும் விடை

| A | B |
|---|---|
| 1. இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் | A. ஸஜஸ்தான் |
| 2. இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் | B. கஸ்வீன் |
| 3. இமாம் இப்னு மாஜா (ரஹ்) அவர்கள் | C. நைஸாபூர் |
| 4. இமாம் அபூதாவூத் (ரஹ்) அவர்கள் | D. புஹாரா |

1. ABCD　2. DCBA　3. CDAB　4. DCAB

18. நபி (ஸல்) அவர்களுக்கு முதன்முதலாக இறங்கிய அல்குர்ஆன் வசனம் இடம்பெற்றுள்ள ஸூறா,

1. ஸூறா புர்க்கான்　2. ஸூறா அலக்　3. ஸூறா தௌபா　4. ஸூறா முல்க்

19. ஸூறா ழுஹாவில் உள்ளடங்கியுள்ள ஆயத்துக்களின் எண்ணிக்கை,

1. 10　2. 14　3. 11　4. 16

20. ஜம்ராக்கள் அமைந்துள்ள இடம்,

1. அரபா　2. முஸ்தலிபா　3. மதீனா　4. மினா

(2x20 =40 புள்ளிகள்)

## பகுதி – II

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

(01) 1. ஹஜ் கடமையை நிறைவேற்றும் **மூன்று** முறைகளையும் குறிப்பிடுக.

2. ஹஜ்ஜின் அர்கான்களைக் குறிப்பிடுக.

3. ஹஜ்ஜின் பயன்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(02) 1. ''மறுமையில் நான்கு விடயங்களுக்குப் பதிலளிக்காத வரையில் எந்த ஒரு மனிதனாலும் நகர முடியாது.'' என ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த அம்சங்களைக் குறிப்பிடுக.

2. ''ஐந்து விடயங்கள் நிகழ முன்னர் ஐந்து விடயங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்'' என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட விடயங்களை எழுதுக.

3. கலீபா அபூபக்கர்(ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் நிகழ்த்திய சாதனைகள் **மூன்றைக்** குறிப்பிடுக.



kalvi.lk

(03) 1. ‘‘ஆதாபுல் மஸ்ஜித்’’ என்றால் என்ன?

2. மஸ்ஜிதில் பேண வேண்டிய ஒழுங்குகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

3. மஸ்ஜிதில் செய்யக்கூடாதென தடுக்கப்பட்டுள்ள அம்சங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(04) 1. அல்குர்ஆனில் குறிப்பிடப்படும் நபி ஆதம்(அலை) அவர்கள் பாவமன்னிப்புக் கோரிய வசனத்தை எழுதுக.

2. இறைவனிடம் பாவமன்னிப்புக் கோரியதாக அல்குர்ஆன் குறிப்பிடும் நபிமார்கள் **நால்வரின்** பெயர்களைக் குறிப்பிடுக.

3. பாவமன்னிப்புக் கோருவதற்கான நிபந்தனைகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(05) 1. நபி (ஸல்) அவர்களுக்கு முதன்முதலாக வஹி அருளப்பட்ட முறையினைத் தொகுத்து எழுதுக.

2. அல்குர்ஆன் தொகுக்கப்பட்ட முறையினை சுருக்கமாக விளக்கி எழுதுக.

(06) 1. நபி (ஸல்) அவர்களின் இறுதி ஹஜ் பேருரையின் உள்ளடக்கம் **மூன்றைக்** குறிப்பிடுக.

2. நபி (ஸல்) அவர்கள் மீது ஏன் அன்பு வைக்க வேண்டும் என்பதற்கான காரணங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

3. நபி (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பை வெளிப்படுத்தும் வழிமுறைகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(07) 1. ஹதீஸ் துறை இமாம்கள் **அறுவரின்** பெயர்களைக் குறிப்பிடுக.

2. ‘‘ஸுனன் அர்பஆ’’ என அழைக்கப்படும் ஹதீஸ் கிரந்தங்களைக் குறிப்பிடுக.

3. இமாம் புஹாரி (ரஹ்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக எழுதுக.

(12x5 = 60 புள்ளிகள்)

***



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457